www.agaram.lk

1977



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | |
|---|---|---|
| නැටුම් (භරත) I<br>நாட்டியம் (பரதம்) I<br>Dancing (Baratha) I | 53 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

✻ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

✻ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

✻ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

✻ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** கௌத்துவப் பாடலில் 'வாமனருபா' எனக் குறிப்பிடப்படும் கடவுள்
(1) முருகன் (2) கணபதி (3) சிவன் (4) பார்வதி (5) பிரம்மா

**2.** கீதகோவிந்தப் பாடல்களில் ஆடப்படும் நிருத்திய உருப்படி
(1) ஜாவளி (2) அலாரிப்பு (3) அஷ்டபதி (4) தில்லானா (5) சப்தம்

**3.** நாட்டிய சாஸ்திரத்தில் இரண்டாவது அத்தியாயமாகக் குறிப்பிடப்படுவது
(1) அரங்கம் (2) ரசம் (3) அபிநயம்
(4) விருத்தி (5) கரணங்கள்

**4.** மிஸ்ரஜாதி ஜம்பைதாளம் சங்கீர்ணகதியாக மாறும்போது எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை
(1) 30 (2) 40 (3) 50 (4) 70 (5) 90

**5.** 'திருமயிலைக் குறவஞ்சி' என்னும் நாட்டிய நாடகத்தை எழுதிய ஈழத்து நடன ஆசான்
(1) ஏரம்பு சுப்பையா (2) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் (3) இராஜநாயகம்
(4) கீதாஞ்சலி நல்லையா (5) கைலாயபிள்ளை

**6.** அணிகலன்கள் யாவும் வெள்ளியிலோ அல்லது வெள்ளி நிறத்திலோ அணிந்து ஆடப்படும் சாஸ்திரிய நடனம்
(1) ஒடிசி (2) பரதநாட்டியம் (3) குச்சுப்புடி
(4) மோகினியாட்டம் (5) கதகளி

**7.** சிவபெருமான் பஞ்சகிருத்தியங்களைச் செய்வதற்காக எடுத்த வடிவம்
(1) தெட்சணாமூர்த்தி வடிவம் (2) சோமஸ்கந்த வடிவம் (3) நடராஜ வடிவம்
(4) அர்த்தநாரீஸ்வர வடிவம் (5) லிங்கோர்பவ வடிவம்

**8.** ஆரம்பத்தில் பெருத்தும் பின்னர் சிறுத்தும் இறுதியில் பெருத்தும் காணப்படும் ஜதி அமைப்பு
(1) மிருதங்க ஜதி (2) ஸ்ரோதோவஹ ஜதி (3) கோபுச்ச ஜதி
(4) டமருக ஜதி (5) விஷம ஜதி

**9.** மோகினியாட்ட நடனக் கிரமத்தைத் தொகுக்க முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர்
(1) இராஜராஜ சோழன் (2) தஞ்சை நால்வர் (3) ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்
(4) டாக்டர் சுவாமிநாத ஐயர் (5) சுவாதித் திருநாள் மகாராஜா

**10.** ஏனைய சாஸ்திரிய நடனங்களை விட குச்சுப்புடி நடனத்தின் சிறப்பம்சங்களிலொன்றாக அமைவது
(1) நர்த்தகியின் ஒப்பனை மிகைப்படுத்தப்பட்டிருத்தல்
(2) நர்த்தகியின் பாவம் அதிகரித்துக் காணப்படல்
(3) நர்த்தகி பாடிக்கொண்டு ஆடுதல்
(4) நர்த்தகி பக்கவாத்தியம் வாசித்துக்கொண்டே ஆடுதல்
(5) நர்த்தகியின் அங்க அசைவுகள் மிகைப்படுத்தப்பட்டிருத்தல்

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**11.** 'தெய் தெய் திதிதெய்' என்னும் அடவினைச் செய்யும் பாதபேதம்
(1) லுடிதம் லோலிதம் (2) குட்டணம் (3) ததஹ்பரம்
(4) வேகினீ (5) சரணம்

**12.** ஸ்ரீமதி ருக்குமணி அருண்டேல் அவர்களின் முதலாவது பரத நாட்டியக் குரு
(1) கௌரி அம்மாள் (2) மீனாட்சி சுந்தரம்பிள்ளை (3) இராமையாபிள்ளை
(4) பாலசரஸ்வதி அம்மாள் (5) ஜீவரத்தினம் இராஜலட்சுமி

**13.** 'சங்கீர்ண ஜாதி' என விருதுப் பெயர் பெற்ற மன்னன்
(1) அநபாயன் (2) நாயக்க மன்னன் (3) இரண்டாம் பரமேஸ்வரன்
(4) மகேந்திர வர்மன் (5) குலோத்துங்க மன்னன்

**14.** பிண்டி, பிணையல் முதலான கை அசைவுகள் பற்றிக் கூறும் நூல்
(1) அபிநயத்தர்ப்பணம் (2) நாட்டிய சாஸ்திரம் (3) சிலப்பதிகாரம்
(4) நாட்டியக்கலை (5) பரதக்கலை

**15.** திரிகால தீர்மானத்தின் ஒழுங்குகளாக அமைவன
(1) விளம்பம், மத்திமம், துரிதம் (2) மத்திமம், துரிதம், விளம்பம்
(3) துரிதம், விளம்பம், மத்திமம் (4) மத்திமம், விளம்பம், துரிதம்
(5) விளம்பம், துரிதம், மத்திமம்

**16.** ஐந்து வகைக் கௌத்துவம் முதன்முதலில் ஆடப்பட்ட காலப்பகுதி
(1) பல்லவர் காலம் (2) சோழர் காலம் (3) சங்ககாலம்
(4) சங்கமருவிய காலம் (5) நாயக்கர் காலம்

**17.** சாந்திக் கூத்தின் முதற் பிரிவாகக் கருதப்படுவது
(1) சொக்கம் (2) அகமார்க்கம் (3) அபிநயக் கூத்து
(4) ஆரியக் கூத்து (5) விநோதக் கூத்து

**18.** ஸ்ரீ கிருஷ்ணன் எவ்வகை நாயகர்களுக்குள் உள்ளடக்கப்படுவார் ?
(1) தீரசாந்தன் (2) தீரோத்ததன் (3) தீரோதாத்தன்
(4) வைசிகன் (5) தீரலலிதன்

**19.** நாயக, நாயகிகளைச் சேர்த்து வைப்பதில் மிகத் திறமை உடையவள்
(1) தாஸி (2) சகி (3) சேடி
(4) தாத்ரேயி (5) இலிங்கினி

**20.** ஓர் உணர்வு தோன்ற காரணமாக இருப்பது
(1) விபாவம் (2) பாவம் (3) அனுபாவம்
(4) வியப்பிச்சாரி பாவம் (5) நிஜகார்யாபிநயம்

**21.** பரதநாட்டியம் எந்தப் பாரம்பரியத்தின் ஊடாக நடன வடிவம்பெற்றது ?
(1) குறவஞ்சி (2) யக்ஷகானம் (3) சதிர்
(4) பாகவதமேளம் (5) நாட்டிய நாடகம்

**22.** சோழர் காலத்து ஆடற்கலைஞர்களுக்கு கோயில்களில் ஒதுக்கப்பட்ட மண்டபம்
(1) வட்டக்களரி (2) மேடை (3) அரங்கு
(4) ஊர்தி மேடை (5) திருவோலக்க மண்டபம்

**23.** கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் ஆக்கிய பதம்
(1) குயிலே உனக் கனந்த கோடி நமஸ்காரம்...
(2) கண்ணனிடம் எடுத்துச் சொல்லடி...
(3) அழைத்து வா போடி...
(4) தையலே உன்னை நினைந்து...
(5) நல்ல சகுனம் நோக்கிச் சொல்லடி...

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

**24.** தில்லானா எனும் உருப்படியில்,
(1) பல்லவியில் சாகித்தியம் அமைந்திருக்கும்.
(2) அனுபல்லவியில் சாகித்தியம் அமைந்திருக்கும்.
(3) சரணத்தில் சாகித்தியம் அமைந்திருக்கும்.
(4) பல்லவியிலும் அனுபல்லவியிலும் சாகித்தியம் அமைந்திருக்கும்.
(5) அனுபல்லவியிலும் சரணத்திலும் சாகித்தியம் அமைந்திருக்கும்.

**25.** சிருங்கார ரஸத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் உருப்படி
(1) கௌத்துவம் (2) அஷ்டபதி (3) கீர்த்தனம் (4) சப்தம் (5) ஜாவளி

**26.** மங்கள, அமங்கள நிகழ்வுகளின்போது வாசிக்கப்படும் வாத்தியங்கள்
(1) சேமக்கலம், சங்கு (2) பறை, டோல்கி (3) தப்பட்டை, சங்கு
(4) நாதஸ்வரம், தவில் (5) உடுக்கு, மிருதங்கம்

**27.** சங்க காலத்தில் கணிக்காரி, சாலினி, தேவராட்டி என்ற பெயர்களில் அழைக்கப்பட்டவர்கள்
(1) பாடும் பெண்கள் (2) இசைக்கருவி இசைப்போர் (3) குரவை ஆடும் பெண்கள்
(4) வெறியாடும் பெண்கள் (5) துணங்கை ஆடும் பெண்கள்

**28.** சிவனது முக்கண் குறிப்பது
(1) ஆணவம், கன்மம், மாயை (2) இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி
(3) பாசம், அங்குசம், மழு (4) பதி, பசு, பாசம்
(5) ஆரணி, செனனி, கோயயித்திரி

**29.** “மன்றல் வருஞ் சேனை தனைக் கண்டு பயந்தால் - இந்த
மையலும் கிறுகிறுப்பும் கையலர்க்குண்டோ...”
எனத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் யாரால் பாடப்பட்டது ?
(1) குறவன் (2) குறத்தி (3) கட்டியக்காரன்
(4) வசந்தவல்லி (5) தோழி

**30.** பரத நாட்டியத்தில் அழகிய பெண்ணின் உருவத்தைக் காட்ட அபிநயிப்பது
(1) அர்த்தசூசி பிடித்து ‘S’ போல வளைத்துக் காட்டல்
(2) சர்ப்பசீரசம் பிடித்து ‘S’ போல வளைத்துக் காட்டல்
(3) மிருகசீரசம் பிடித்து ‘S’ போல வளைத்துக் காட்டல்
(4) கபித்தம் பிடித்து ‘S’ போல வளைத்துக் காட்டல்
(5) கம்சாஸ்யம் பிடித்து ‘S’ போல வளைத்துக் காட்டல்

**31.** தட்டு மெட்டு அடவு செய்யும் பாத நிலை
(1) ஸ்தானகம் (2) ஆயதம் (3) ஆலிடம் (4) பிரம்மரி (5) ப்ரேங்கணம்

**32.** த்ரு குடு தக தக = த்ருகுடுதக த்ருகுடுதக // என்ற தத்தக்கார தொனி வருவது
(1) திஸ்ர அலாரிப்பு (2) சதுஸ்ர அலாரிப்பு (3) கண்ட அலாரிப்பு
(4) மிஸ்ர அலாரிப்பு (5) சங்கீர்ண அலாரிப்பு

**33.** “படுக்கை நொந்ததடி பாலும் கசந்ததடி...” இப்பாடலடி உணர்த்தும் நாயகி
(1) கலகாந்தரிதா (2) வாசகசஜ்ஜிதா (3) விரஹோத் கண்டிதா
(4) கண்டிதா (5) ஸ்வாதீனபதிகா

**34.** உபாங்கம் என்னும் பகுதியில் அடங்குபவை
(1) புஜங்கள், முதுகு, வயிறு, தொடை (2) தலை, கை, இடை, பாதங்கள்
(3) தலை, வயிறு, இடை, முதுகு (4) கண், மூக்கு, கன்னம், உதடு
(5) மூக்கு, தலை, கை, நாக்கு

**35.** ; ; ; ; ; ; ; ; /, ததிங் கிணதொம் ததிங் / கிணதொம் ததிங் கிணதொம் //
மேற்படி பஞ்சஜாதி ததிங்கிணதொம் குறியீட்டில் எழுதப்பட வேண்டியது
(1) தகதிமி தகதிமி தகதிமி தகதிமி த (2) தகிட தகிட தகிட தகிட த
(3) தகதகிட தகதகிட தகதகிட தகதகிட த (4) தகதிமி தகிட தகதிமி தகிட த
(5) தகதிமி தகதிமி தகிட தகிட த

**36.** கதகளி ஆடலில் இராவணனைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் வேஷம்
(1) தாடி (2) மினுக்கு (3) கரி (4) வெள்ளை (5) கத்தி

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk

www.agaram.lk



37. வண்ண முகமூடிகளை அணிந்து ஆடப்படும் நடனம்
(1) கோலம் (2) சொக்கரி (3) மடு
(4) உடுக்கி (5) நையாண்டி

38. வாத்சாயனாரால் தொகுத்துக் கூறப்பட்டது
(1) ஐம்பெருங்காப்பியம் (2) கொன்றைவேந்தன் (3) திருமந்திரம்
(4) பாமாலை (5) அறுபத்துநான்கு கலைகள்

39. தெய்வங்களை வழிபாடு செய்து நன்மை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆடப்படும் சப்ரகமுவ நடன மரபு
(1) யாதினி மாத்ரய (2) யக்பத மாத்ரய (3) பட்டுதல் மாத்ரய
(4) சிந்து மாத்ரய (5) முல் மாத்ரய

40. ஆலய வழிபாட்டில் 'நிருத்தியோபசாரம்' என அழைக்கப்படுவது
(1) தீபாராதனை (2) பண்ணோடு பாடுதல் (3) நடனம் ஆடுதல்
(4) சுவாமி புறப்பாடு (5) நாதஸ்வரம் வாசித்தல்

41. கூத்து நிகழ்விற்குப் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியமாக அமைவது
(1) மிருதங்கம் (2) தவில் (3) செண்டை
(4) டோல்கி (5) மத்தளம்

42. நடராஜ தத்துவத்தில் 'ஓம்காரத்தைக்' குறிப்பது
(1) ஊன்றிய திருவடி (2) தூக்கிய திருவடி (3) திருவாசி
(4) அபயகரம் (5) வரதகரம்

43. இந்திய மக்கள் தமது பாரம்பரியத்தை விட்டு விலகிச் சென்ற காலம்
(1) குப்தர் காலம் (2) சோழர் காலம் (3) மராட்டியர் காலம்
(4) ஆங்கிலேயர் காலம் (5) நாயக்கர் காலம்

44. வடமொழியில் பரதமுனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
(1) திரு. எஸ். என். ஸ்ரீராமதேசிகன் (2) வீரமாமுனிவர் (3) கனம் கிருஷ்ணையர்
(4) முத்துஸ்வாமிதீட்சிதர் (5) வழுவூர் இராமையாபிள்ளை

45. 'சதுர்தண்டி பிரகாசிகா' என்ற நூலை எழுதியவர்
(1) இரகுநாத நாயக்கர் (2) பாண்டிய மன்னன் (3) விஜயராகவ நாயக்கர்
(4) சகஜி மன்னன் (5) சரபோஜி மன்னன்

46. 'மெய்திக்கள்' என்ற இனத்தவரால் ஆடப்பட்ட சாஸ்திரிய நடனம்
(1) கதகளி (2) குச்சுப்புடி (3) மணிப்புரி
(4) கதக் (5) ஒடிசி

47. பரண கணித என்பவருக்கு குஷ்டரோகத்திலிருந்து விடுதலைப் பெற பாடப்பட்ட கவி
(1) கௌத்துவம் (2) கீர்த்தனம் (3) ஜாவளி
(4) திருப்புகழ் (5) சிந்துவண்ணம்

48. ஆலயங்களிலே விஷேட தினங்களில் ஆடப்பட்ட 'ததி (Dadhi)' என்ற புனித நடனம் இடம்பெறும் ஆடல் வகை
(1) மணிப்புரி (2) கதக் (3) கதகளி
(4) மோகினி ஆட்டம் (5) பரதம்

49. யாழ்/வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் 'நடனம்' பற்றி சொற்பொழிவாற்றிய இந்திய கலைஞர்
(1) பொன்னையாபிள்ளை (2) ஈ. கிருஷ்ணய்யர்
(3) வழுவூர் இராமையாபிள்ளை (4) பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(5) அடையார் லக்ஷ்மணன்

50. நடனக்கலையில் 'இளங்கலைமானி' என்னும் பட்டத்தை வழங்கும் நிறுவகம்
(1) இராமநாதன் நுண்கலைக் கழகம்
(2) சுவாமி விபுலானந்தா கற்கைகள் நிறுவகம்
(3) வட இலங்கைச் சங்கீத சபை
(4) திருமறைக் கலாமன்றம்
(5) தேசிய கல்வியியற் கல்லூரி

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



AL/2017/53/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| නැටුම් (භරත) II<br>நாட்டியம் (பரதம்) II<br>Dancing (Baratha) II | 53 T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் முதலாம் வினா உட்பட **இரண்டு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) பதவர்ணத்தின் இலட்சணத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டு, அதன் அனுபல்லவி பகுதிக்குரிய தீர்மானம் ஒன்றைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (10 புள்ளிகள்)

(iii) அப்பதவர்ணத்தின் முதலாவது சரண ஸ்வரக்கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (06 புள்ளிகள்)

**2.** செண்டை வாத்தியத்தினைப் பக்கவாத்தியமாக எடுத்துக் கொள்ளும் சாஸ்திரிய நடனம் ஒன்றினைப் பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு விளக்குக.

(i) சாகித்திய அமைப்பு (பாடல்) (03 புள்ளிகள்)

(ii) அங்க அசைவுகள் (05 புள்ளிகள்)

(iii) இரச வெளிப்பாடு (05 புள்ளிகள்)

(iv) ஒப்பனை (07 புள்ளிகள்)

**3.** தாள தஸப் பிராணன்கள் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

**4.** பரதநாட்டிய மேடை அமைப்பு பற்றிப் பின்வரும் அடிப்படையில் விளக்குக.

(i) அரங்கம்

(ii) ஒளி

(iii) ஒலி

(iv) காட்சி விதானிப்பு (4 × 05 = 20 புள்ளிகள்)

**5.** சிறுகுறிப்பு எழுதுக.

(i) குதிரையாட்டம்

(ii) கொஹோம்ப கங்காரிய

(iii) சாத்விகா அபிநயம்

(iv) முகவீணை (4 × 05 = 20 புள்ளிகள்)

**6.** கனம் ஈ. கிருஷ்ணய்யர் பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி எழுதுக. (20 புள்ளிகள்)

**7.** இலங்கையில் கலையினை வளர்க்கும் அரச நுண்கலை நிறுவனங்களில் ஒன்றான இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் தோற்றம், வளர்ச்சி, ஆடற்கலைக்கு அதன் பங்களிப்பு என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

**8.** இன்றைய நாட்டிய நாடகங்களின் சாதக, பாதக நிலைகளை எடுத்துக்காட்டுகளுடன் விமர்சிக்குக. (20 புள்ளிகள்)

※ ※ ※

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!